**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 231/2024 (வாசா1 – மதன்மோகன்) தேதி: 02.02.2026.</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 2 முதல் 4, 7,8, 16, 32, 40, 41, 43, 64 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

வா.சா.ஆ.5 ஆவணத்தில் கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள் மொத்தம் 50 நபர்கள் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். உறவின்முறை சங்கத்தின் மொத்த நிர்வாக குழு உறுப்பினர்கள் 65 பேர்கள் என்றாலும் ஆனால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ல் 50 நபர்கள் என்று மட்டுமே உள்ளதால் வா.சா.ஆ.5 சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 இந்த வழக்கிற்காக எங்களால் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றாலும், அசல் துணை விதிகள் ஆவணம் உறவின்முறை சங்கத்திலும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலும்தான் இருக்கும் என்றாலும் சரியல்ல. உறவின்முறை சங்கத்தில் கடைசியாக 2017ம் வருடம் நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால் நான் 2019ம் வருடம் தான் உறவின்முறை சங்கத்தில் சேர்ந்தேன், அதனால் 2017ம் வருடம் நடந்த விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 ன் படி உறவின்முறை சங்கத்திற்கு தேர்தல் எவ்வாறு நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் துணை விதிகள் 26ல் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது நடைபெற்ற தேர்தலும் விதி 26 ஐ பின்பற்றிதான் நடந்தது

என்றால் சரியல்ல. தற்பொழுது நடைபெற்ற தேர்தலில் தேர்தல் நடத்தும் அதிகாரி வேட்பு மனு வாங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான்தான் என் தாய்மாமாவிற்கு உறவின்முறை சங்க தேர்தலில் வேட்பு மனுவை வழிமொழிந்தேன். சங்க தேர்தலின்போது ஒவ்வொரு வேட்பாளருக்கும் இரு நபர்கள் வழி மொழிய வேண்டும் என்றால் சரிதான். அந்த வழி மொழியும் இரு நபர்களும் உறவின்முறை சங்கத்திற்கு சந்தா, மகமை, தலைக்கட்டு வரி செலுத்தியிருக்க வேண்டும் என்றால் இல்லை. சந்தா, தலைக்கட்டு வரி செலுத்தியிருந்தால் மட்டுமே போதும். வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர் அந்த வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும் என்றால் சரியல்ல. அதன் பின்னர் இறுதி வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு தேர்தல் நடைபெறும் என்றால் தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பு மனுவை பரிசீலனை செய்யும் போது சந்தா, மகமை, தலைக்கட்டு வரி செலுத்தப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து செலுத்தாத பட்சம் அதை செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் மற்றும் அதன்பின்னர்தான் வேட்பு மனு ஏற்கப்படும், ஆனால் நடந்த தேர்தலில் மேற்படி நடைமுறை முறையாக நடைபெறவில்லை. துணை விதிகளில் எந்த இடத்திலாவது வேட்பு மனு ஏற்கப்படும் முன்பு சந்தா, மகமை, தலைக்கட்டு வரி செலுத்தப்படுவதற்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

துணை விதிகளில் ரகசிய வாக்கெடுப்பு நடத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2022ம் வருடம் நடைபெற்ற தேர்தல் ரகசிய வாக்கெடுப்பு முறையில் நடந்தது என்றால் சரிதான். 2022ம் வருடம் நடைபெற்ற தேர்தல் குறித்து தேர்தல் நடத்தும் ஆணையர் வெளியிட்ட நாளிதழ் விளம்பரம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சாட்சி அந்த ஆவணத்தை தற்பொழுதான் பார்ப்பதாக கூறுகிறார். அந்த விளம்பரத்தை பார்க்காமலே நான் எனது தாய்மாமாவிற்கு தேர்தல் வழி மொழிய சென்றேனா என்றால் எனது மாமா அழைத்ததின் பேரில் நான் உறுப்பினர் என்ற முறையில் வழி மொழிய சென்றேன். வேட்பு மனு பரிசீலனையின் போது என் மாமாவுடன் நான் உடன் செல்லவில்லை. நான் எனது அடையாள அட்டையை காண்பித்து பூத் ஏஜென்ட்டாக மீன் சின்னத்திற்கு வேலை பார்த்தேன். நான் பூத் ஏஜென்ட்டாக வேலை பார்ப்பதற்கு தேர்தல் நடத்தும் அலுவலர் என்னை அழைக்கவில்லை என்றாலும் மீன் சின்னம் சார்பாக என் பெயரை பூத் ஏஜென்ட் வேலைக்கு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் கொடுத்ததால் நான் பூத் ஏஜென்ட்டாக வேலை பார்த்தேன் என்றால் நான் உறுப்பினர் என்ற முறையில் மீன் சின்னம் சார்பாக வேலை பார்க்க என்னை வேட்பாளர் அழைத்ததால் நான் பூத் ஏஜென்ட்டாக வேலை பார்த்தேன். எம்.டி.எம். தங்கராஜ் மீன் சின்னத்தில் போட்டியிட்டார் என்றால் எனக்கு தெரியாது. பொற்செழியன்

என்பவர் மீன் சின்னத்தில் போட்டியிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. யார் யார் போட்டியிட்டார்கள் என்பது தெரியாமல்தான் நான் பூத் ஏஜென்ட்டாக வேலை பார்த்தேனா என்றால் சரிதான். துணை விதிகளில் கண்ட எந்தெந்த விதிகளின் படி சங்க தேர்தல் முறையாக நடைபெறவில்லை என நான் கூறுகிறேன் என்றால் 26(சி), 26(ஏ), 26(ஜெ) படி கூறுகிறேன். நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் விதி 26(ஏ), 26(ஜெ) பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 26(சி) ன் படி நாடார் மேல்நிலைப்பள்ளி, நாடார் நடுநிலைப்பள்ளி, காமராஜர் மெட்ரிகுலேஷன் பள்ளி, நாடார் உறவின்முறை சங்கம், எஸ்.எஸ்.டி.எம் கல்லூரி ஆசிரியர்களை தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமணம் செய்து கொள்ளலாம் என உள்ளது என்றால் சரிதான். அந்த விதிகளில் மேற்கூறிய நபர்களை மட்டுமே தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமிக்க வேண்டும் என்றும் வேறு நபர்களை தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமிக்க கூடாது என்றும் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. 2022ம் தேர்தலை பொறுத்தவரை தேர்தல் ஆணையரை உயர்நீதிமன்றமே நியமணம் செய்து தேர்தல் நடத்தியுள்ளதால் அவருக்கு தேர்தலை நடத்த உரிமையுள்ளது என்றால் உயர்நீதி மன்ற உத்தரவின்படி தேர்தல் ஆணையர் மேற்பார்வையில் துணை விதிகளின்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றுதான் கூறப்பட்டுள்ளதே தவிர தேர்தல்

ஆணையரே முழுவதும் தேர்தல் நடத்த உத்தரவு வழங்கப்படவில்லை. உறவின் முறை சங்க தேர்தலை நடத்தும் படி முதன் முதலாக யார் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது என்றால் எனக்கு தெரியாது. தேர்தல் முடிந்த பிறகு தேர்தல் முடிவுகளை அறிவிக்க கூடாது என்று அந்த முடிவை நிறுத்தி வைக்க உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியதா அல்லது உச்சநீதிமன்றம் உத்தரவு வழங்கியதா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் உச்சநீதிமன்றம் அவ்வாறு தடை உத்தரவு பிறப்பித்ததாக கூறியுள்ளோம் என்றால் எங்கள் வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியதா அல்லது உச்சநீதிமன்றம் உத்தரவு வழங்கியதா என்பது குறித்து தெளிவு இல்லாமல் எங்கள் பிராதே குழப்பமாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1 முதல் 65 பிரதிவாதிகள் சங்க தேர்தலில் வெற்றி பெற்றது சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அவர்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதுதான் எங்கள் கட்சி ஆகும். 67 வது பிரிதிவாதி தேர்தல் முடிவுகளை எந்த தேதி அறிவித்தார் என்றால் எனக்கு தெரியாது. 67 வது பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தால் நியமணம் செய்யபப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி அவர் செயல்பட்டார் என்றால் சரியல்ல. உச்ச நீதிமன்ற உத்தரவின் படி தேர்தல் அதிகாரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்ட தேர்தல் கோப்புகளை திரும்ப பெற்றுக்கொண்டு அதன்படி தேர்தல் முடிவுகளை அறிவித்தார் என்றால் எனக்கு தெரியாது. தேர்தல் முடிவுகளை அறிவிப்பதற்கு முன்பு முடிவுகளை அறிவிக்க போவதாக நாளிதழில் 66 வது பிரதிவாதி அறிவிப்பு வெளியிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதன்படி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 66 வது பிரதிவாதி படிவம் 7 வழங்கினார் என்றால் சரியல்ல. மீன் சின்னத்தில் உறவின் முறை சங்க தலைவராக திலகரத்தினம் என்பவர் போட்டியிட்டார் என்றால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்தான் சங்க தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மீன் சின்னத்தில் திலகரத்தினம் தலைமையிலான அணி என்றுதான் விளம்பரம் செய்தோம் என்றால் நான் எந்த விளம்பரமும் அவ்வாறு செய்யவில்லை. நான் மீன் சின்ன அணிக்கு ஏஜெண்ட்டாக இருந்ததால் அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் திலகரத்தினம் படிவம் 7 வழங்க கூடாது உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும் அந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது. 2022 ம் வருட சங்க தேர்தல் துணை விதிகளின்படிதான் நடந்துள்ளது என்றாலும் நானும் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கு கொண்டுள்ளேன் என்றாலும் தற்பொழுது பொய்யான விவரங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த

வழக்கில் கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தை ஒரு தரப்பினராக நாங்கள் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதற்காக சங்கத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தேர்தல் முறைகேடுக்காகதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேலும் சங்கத்தின் நலனில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். நான் உறவின்முறை சங்கத்தில் தற்பொழுது உறுப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. நான் உறுப்பினர். 2 மாதங்களுக்கு முன்பு சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நடந்த போது நானும் இதர வாதிகளும் எங்களை சங்கத்தில் இருந்து நீக்கம் செய்தது செல்லாது என கேட்டு உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை :** இதர பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளுபடி செய்யப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.